# களத்தில்

களம்-4 ஒக்டோபர்-1985 ஊக்குவிப்பு: 2-

# முழுமையான வெற்றிக்காய் முடிவான பாதையில்..........

**தமிழக மக்களின் தீர்க்கமான முடிவு உலகெங்கும் அ' .க்கு முறைக் குள்ளாகி வரும் தமிழினத்திற்கு ஓர் தனி நாடு அமைய வேண்டும் என்பதே.நாடுகடத்தப்பட்டோரை திருப்பி அழைத்தது தமிழக மக்களின் இனப் பற்றில் எழுந்த மன உணர்வே.ஒன்று மட்டும் நிச்சயமாகிவிட்டது தமிழகம் இருக்கும் வரை தமிழீழம் அமைந்தே தீரும். இந்த சுதந்திர பூமி மக்களின் சகல வகையிலான அடக்கு முறைகளையும் தகர்த்தெறிந்து மக்கள் தம்மைதாமே ஆளும் சுதந்திர தமிழீழமாக மலர வேண்டும்**

நாடு கடத்தப்பட்ட டாக்டர் பாலசிங்கத்தின் மீதான நாடு கடத்தல் சட்டம் ரத்தாகியுள்ளது . மக்கள் சக்திக்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியே இதுதமிழீழ மக்களுக்கு ஒரு படிமேலே தமிழக மக்களின் தீர்க்கமான முடிவும் தமிழீழம் தான்,

தென் நாட்டில் ஒவ்வொர் மகனினதும் உணர்ச்சி மயமானபங்களிப்பே இந்திய மத்யஅரசின் முடிவில் மாற்றம் ஏற்படக் காரணமாய் அமைந்திருக்கிறது. சிறிலங்காவின் பிடிக்குள் சிக்கியுள்ள தன் சகோதரருக்கு எதிராக எடுத்த முடிவைக் கண்டு போராட்டத்தினுள் குதித்தது தமிழகம் தன் சகோதரர்களுக்காக தன் நாட்டில் சிறைசென்ற, தீக்குளித்த தமிழ் நெஞ்சங்களை தமிழீழத்திலுள்ள ஒவ்வொர் உயிரும் ஒரு போதும் மறக்கப் போவதில்லை. தமிழீழமகனின் உடலில் ஓடும் ஒவ்வொர் துளி ரத்தத்திலும் இந்த உணர்வுகள் நீக்கமற நிறைந்திருக்கும்.

## திட்டமிட்டே விடுதலையை சீரழிக்கும் முயற்சிகளில்

நெருக்கடி மிக்க இந்நேரத்தில் போராட்டத்தை மழுங்கடிப்பதற்கான முயற்சிகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. சில சதி முயற்சிகளினுல்மக்களைமயக்கநிலையில் போலி மாயையில்வைத்திருக்கும் விடயங்களை அடக்குமுறையாளன் திட்டமிட்டே தமிழீழ மண்ணில் புகுத்துகிறான்.


இதில் ஒன்றே போதைவஸ்து பாவனையாகும் தூள்வடிவில் கிடைக்கும் இப்போதைவஸ்து மனிதனை மயக்க நிலையில் வைத்து வாழ்வையே சீரழிக்கிறது. இந்த பவுடர் பாவனையால் இன்று பலர் தமிழீழ வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். மனிதனின் சிந்தனை சக்தியை தடைப்படுத்தி மாயையில் மயக்க நிலையில் வைத்து. ஈற்றில் அவனை கொல்லும் இப் பவுடர் பாவனையை முற்றாக ஒழிப்போம். சமுதாயத்தில் "பெரிய புள்ளிகள்" என மதிக்கப்படுவோரே இங்கு பவுடர் விற்பனை ஏஜண்டுகளாக உள்ளனர். இவர்களுக்கு தமிழீழ மக்களின் சமுதாய பொறுப்புள்ள ஒவ்வொருவரினதும இறுதி எச்சரிக்கை.

"இந்த இழி தொழிலை உடன் நிறுத்துங்கள். எம் எதிர்கால சந்ததியின் அழிவில் உங்கள் வாழ்வை வளமாக்க முயலாதீர்கள்" மேலும் சீரழிந்த மேலைநாட்டு கலாச்சாரங்கள் எம்மண்ணில் நிலை பெறுவதை தடுக்க வேண்டியது இன்றியமையாததே.

மினி சினிமாக்களின் ஆபாசப்படங்களோடு இன்று புதிதாக முளைத்துள்ளது டிஸ்கோ! இதன் வளர்ச்சிப் போக்கு மேலைநாடு ளில் நடைபெற்று வரும் ஆண் பெண் அரை நிர்வாண, நிர்வாண நடனம், துகிலுரியும் நடனத்திற்கெல்லாம் இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை. பாலியல் ரீதியான வக்கிரங்களையே சித்தரித்து போராட்ட உணர்வையே மழுங்கடித்து எதிர்கால இளம் சந்ததியை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் இத்தகைய சீரழிவுகளை முற்றாக நிராகரிப்போம்.

## கலாச்சாரத்தைப் பாதுகாப்போம்

நமது நாட்டு கலைப்படைப்புகளை செழுமை படுத்தி அடக்கப்பட்ட மக்களுக்காக புதுப்புது வடிவங்களில் புகுத்துவோம். இன்று தமிழீழ மண்ணிலே பெருகி வரும் கலைப் படைப்புகளை கண்டு பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் அடையும் அதே வேளை தொடர்ந்தும் இயங்காமலுள்ள கலைஞர்களுக்கு விடுதலைப் புலிகளின் அன்பான வேண்டுகோள். "ஒன்று படுவோம். ஒற்றுமையாய் உழைப்போம். நமது கலாச்சாரத்தை பாதுகாப்போம்"




## பெண் விடுதலை

இன்று தமிழீழ மண்ணிலே புதிது புதிதாய் வெளி வரும் பிரசுரங்களில் சமீபத்தில் வெளி வந்த பெண்களுக்கான பத்துக் கட்டளைகள் பெரும் வேதனைக்குரியதும் கண்டிக்கத் தக்கதுமேயாகும்.

எம் மொத்த சனத்தொகையில் அரைவாசிக்கு மேல்உள்ள பெண்கள் போராட்ட வளர்ச்சிப் போக்கில் இப் போராட்டத்தில் ஒன்று கலக்க வேண்டியது தவிர்க்க முடியாததே. எம் சமுதாய அமைப்பில் பெண்கள் அனுபவிக்கும் எதிர் நோக்கும் அடக்கு முறைகள் அவர்களின் சமூகவிழிப்புணர்வின்றியே அடங்கி ஒடுக்குவனவாய் உள்ளன.

இந்த போராட்டத் தலைமுறையில்- புரட்சிகர சமுதாயத்தில் இதன் தாக்கம் குறைவாயிருப்பினும் பெண்களாக விழித்தெளாத வரை, அவர்கள் ஆண் ஆதிக்கத்திலிருந்து தமது பெண் அடிமைத் தனத்திலிருந்து விடுபட முடியாது,

பெண் விடுதலையில் அல்லது விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்களிக்க முதல் பூரண தெளிவுள்ளவர்களாக வேண்டும் பூரண அரசியற் தெளிவோடு கட்டுப்பாடு நல் ஒழுக்கம் நிறைந்த கட்டுக் கோப்பாக பெண்கள் அமைப்பு மலர வேண்டும்.

எதுவித தெளிவும் இன்றி இள வயதில் ஏற்படும் ஊத் வேகத்தோடு பெண்கள் போராட்டத்தில் தம்மை முழுமையாக்கிக் கொளவது மிகத் தவறானதே.

எனவே தமிழீழத்திலுள்ள ஒவ்வோர் சகோதரியும் பூரண அரசியற் தெளிவோடு சரியான ஒழுங்கமைவான அமைப்பின் கீழ் தம்மை அணிவகுத்துப் போராட்ட பாதையில் ஒன்று கலப்பார்கள் என்பது திண்ணம்.

## இயக்கங்கள் ஒழுங்கு கட்டுப்பாடாக வேண்டும்

விடுதலை இயக்கங்கள் சரியானபாதையில் தம்மை ஒழுங்கு படுத்தி கட்டுபபாடாக்கி கொள்ள வேண்டியது மிகக் கட்டாயமானது. சரியான அத்திவாரம் பொருளாதார திட்டமிடலின்மையே மக்கள் விரோத செயற்பாட்டுக்கு காரணமாய் அமைகிறது. ஒழுங்கமைவான வளர்ச்சியின்றி உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாத்திரம் வீங்க வைத்து எதுவித சிந்தனையுமற்றவர்களை சரியான பொருளாதாரமின்றி வீதிகளில் உலாவ விட்டால்- - - -

இந்த நிலையில் சர்வதேச ரீதியிலான போராட்டத்தை நாம் நன்கு ஆராயவேண்டும். அந்த பகுதி மக்களின் அனுமதியின்றி அந்த பகுதி ஏரியில் கூட மீன் பிடிக்கமுடியாமல் பட்டினி கிடந்தவர்களையே வரலாறு எமக்கு உணர்த்துகிறது. இத்தனை தியாகத்தையும், ஒழுங்கையும் பேணுமாறு நாம் சொல்லவில்லை. எமது மக்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தம்மாலியன்ற முழுப் பங்களிப்பையும் புரிந்து வருகிறார்கள்.

யாழ் பொலிஸ் நிலைய தாக்குதலின் பின் ஆயுதக் கொள்வனவிற்காக நாம் மக்களை நாடியபோது மக்களின் முழு உணர்வு பூர்வமான பங்களிப்பையே நாம் கண்டோம். "இன்றும் எம்மை அணைத்து பாதுகாத்து வருபவர்கள் எம் மக்கள் தான்"

விடுதலை இயக்கங்கள் தம் ஒவ்வொரு உறுப்பினரிடையேயும் பொருளாதார திட்டங்களைப் புகுத்தி செயற் படுத்துதல் அவசியம. இந்த மக்களுக்காக மண்ணிற்காக முழு முயற்சியுடன் உழைப்பில் இறங்கி தம் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டும்.

இயக்கம் எதுவித முயற்சியுமின்றி சும்மாயிருந்து வயிறு வளர்த்தால் அவர்கள் தம் சாப்பாட்டிற்காகவே சமூக விரோத செயற்பாடுகளில் இறங்குவார்கள். அடிப்படை பிரச்சனை இதுதான். எனவே விடுதலை இயக்கங்கள் சந்திக்கு சந்தி நிற்பதையும் வீணே முடங்கிக் கிடப்பதையும் விடுத்து உடன் உடல் உழைப்பில் இறங்கட்டும். இது எவ்வாறு சாத்தியப்படும் என்று யோசிக்க வேண்டாம. எமது 'இயக்கத்தில் விடுதலைப் போராளிகள் முழு முயற்சியுடன் வேலை செய்வது அவர்களை

"மக்களை நேசிக்க வைத்திருக்கிறது"

"சரியான ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வளர்த்திருக்கிறது.

"போராட்டத்தினுள் வைத்திருக்கின்றது"

"முக்கியமாக இன்று அவர்கள் விடுதலைப் போராளியாகி வருகிறார்கள்,'

எனவே விடுதலை இயக்கங்கள் உடனடியாக தம்மை கட்டுப்பாடினுள்ளும் ஒழுங்கினுள்ளும்கொண்டுவந்துமுழுஉழைப்பையும் பயன் படுத்தி பொருளாதாரத்துறையில் நாட்டம் செலுத்துவது மிக இன்றியமையாதது.

சிலசில காரணங்களுக்காக முழு மக்களுமே விரோதிக்கும் மக்கள் விரோத செயற்பாட்டை அனுமதிக்க முடியாது மக்களின் அங்கீகாரம் பெற்ற முடிவுகளை நாம் செயற்படுத்துதல் தவிர்க்க முடியாததே.



"வீர சுதந்திரம் வேண்டி நின்ரேர் பின் வேறென்றைக் கொள்வரோ" -பாரதி-

தமிழீழ மண்ணின் வேதனைகள் தொடர்கின்றன. போராடிய காலத்தில் கொல்லப்பட்ட தமிழீழ மக்களை விட போர்நிறுத்த காலத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ மக்களே மிக அதிகம்-

லங்கா புவத் அறிக்கை

- - - இடத்தில் இராணுவத்திற்கெதிராக பயங்கரவாதிகள் நடாத்திய தாக்குதலில் இராணுவத்தினர்க்கு சிறுகாயம் இராணுவத்தினர் தற்பாதுகாப்பு கருதி சுட்டதில் ...... (10க்கு மேல்) பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். ஏனையோர் பின்வாங்கி ஓடினர்.

ஒவ்வொரு நாளும் கீறிட்ட இடங்கள் நிரப்பப்பட்டு தமிழீழ நிராயுதபாணி மக்களுக்கெதிரான புதுப் புது தாக்குதல்கள் தொடர்கின்றன.

தற்காலிக நிவாரண முகாம் என்ன பயங்கரவாதிகள் முகாமா! திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பெண்கள், குழந்தைகள், முதியோர்.

மூச்! எல்லாமே பயங்கரவாதிகள் தான்!! தலையாட்டப்படுகின்றது.

யுத்தநிறுத்தம் தொடர்கிறது. 3ம் கட்ட பேச்சு வார்த்தை

மக்களின் சக்தி மகத்தானது.

தமிழக மக்களின் மாபெரும் சக்தி சரித்திரத்தை மாற்றி எழுதியிருக்கின்றது. தமிழக மக்களின் ஒன்றுபட்ட கோஷசம்.

சிறிமாவோவின் குடியுரிமை பறிக்கப்பட முதல் பீலிக்ஸ்சின் குடியுரிமை பறிக்கப்பட்டது. பீலிக்ஸ்சின் குடியுரிமை பறிக்கப்படவேண்டிய அவசியமே இல்லை. ஆனுல் பீலிக்ஸ் ஓர் பரீட்சார்த்தமே.

ஆனுல் அடக்கி ஒடுக்கப்பட்ட எமக்காக குரல் கொடுக்கும் உடன் பிறப்புகள் ஒரே ரத்தங்கள்.

"தானுட மறந்தாலும் தசை ஆடும்" எம்மை நெஞ்சார அணைத்து பாதுகாத்து உதிரத்தையும் தசையையும் தந்து வளர்த்து வரும் எம் தாய் தான். தமிழக மக்கள்.

ஒன்று நிச்சயமாகி விட்டது.

தமிழகம் இருக்கும் வரை தமிழீழம் அமைந்தே தீரும். தன் குழந்தையை உயிருக்கு மேலாக மதிக்கும் தாய் தன் குழந்தையை பெற்றே தீருவாள்.

தமிழீழப் போராட்டம் தொடர்கிறது - - - - -

இது என்ன தலைகீழ் எழுத்துக்கள் என்று யோசிக்க வேண்டாம். நிலைமைகள் இப்படித்தான்.

ஒரு துளி கடல் நீர் இருக்கும் வரை அலைகள் ஓயப்போவதில்லை. களத்தில் தூரத்தே இடிமுழக்கங்கள் கேட்டுக்கொண்டேயிருக்கின்றன வானம் எப்படியிருப்பினும் தூறல்கள் தொடர்கின்றன. (முகில்கள் இருக்கும்வரை எப்படித் தூறல்கள் நிற்கும்.) தமிழீழப் பயணங்கள்முடிவதில்லை தொடர்கிறது.

"விடியலுக்கு இல்லை தூரம்"

தூங்குபவர்களை எழுப்பலாம். ஆனுல் தூங்குவது போல் நடிப்பவர்களை!

நெடுந்தூரம் செல்ல வேண்டிய இந்த தியாகப் பயணத்தில் தாம் பல்லக்கில் ஏற காரணமான மக்களையே பல்லக்கை சுமக்க வைத்து தாம் இராஜ பவனியுடன் பல்லக்கில் அமர்ந்து தமது வீட்டையே திரும்ப திரும்ப சுற்றியோர்.

மக்கள் விழித்து விட்டனர். நெடுந்தூரம் செல்ல வேண்டும். வரமுடியாதோர் பயணத்தை மறிக்க வேண்டாம். ஓய்வெடுக்கட்டும் - ஒதுங்கட்டும்.

பகற்கனவு காண்பவர்கள் விடிவு தானுக வரும் எனக் காத்திருப்போர் - காத்திருக்கட்டும்.

யாரும் வரலாம்! விழித்தவர்கள் எவரும் வரலாம்!!

நடக்க முடியாதவர்கள் - இருக்கட்டும் -

இடைஞ்சலாக வேண்டாம்

தூங்குவது போல் நடிக்கும் சந்தர்ப்பவாதி; வெறும் அதிகாரத்திற்காக தமிழினத்தை அடகு வைப்பவன்; சமீபகால சதிவேலையின் கதாநாயகன்.

எதிர்கால சந்ததி உன்னைப் புரிந்து கொள்ளட்டும்.

போராளிகள்! உனது போராளிகளே விழித்து விட்டனர். புரட்சி வெடிக்கும்.

நாம் பயணத்தை தொடர்வோம். உறுதியாக தொடர்வோம். உதிரிகள் வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!! ஒன்ருக நடப்போம். ஒற்றுமையாக நடப்போம்.

அதோ தூரத்தே தெரிகிறது ஓர் விடிவெள்ளி.

# ஓர் இஸ்லாம் சகோதரனின் இதயம்...

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இஸ்லாமிய சகோதரர்கள் அனுப்பிய உருக்கமான கடிதத்தை இங்கு சமர்ப்பிக்கிரேம். முக்கியமாக இந்து சகோதரர்களை நினைவில் நிறுத்தி எழுதப்பட்ட இக்கடிதம் அவர்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்களை, அடக்கு முறைகளை எமக்கு கோடுபோட்டு காட்டுவனவாய் அமைந்துள்ளது.

## பேரன்பு மிக்க இந்து சகோதரர்களே!
## விடுதலைப் புலிகளே!

முதற்கண் எமது வந்தனங்கள். ஒரே தாய் நாடு ஒரே மொழி இவற்றை நாம் கொண்டுள்ள போதிலும் மிக நெருக்கமான அந்நியோன்னியமான உறவு எமக்கிடையே நிலவவில்லை.

இதற்கு எங்கள் பக்கம் சில காரணங்கள் இருந்தாலும் பெரும் பொறுப்பு எம் பழைய தலைவர்களையே சாரும். அவர்கள் எம்மை வேறுபடுத்தி காட்ட முனைந்தார்கள். பிரிவு படுத்தி காட்ட முனைந்தார்கள், எம்மை திட்டமிட்டே ஒதுக்கினுர்கள். விளைவு எமக்கிடையே விரிசல் வளர்ந்தது.

அவர்கள் முதலாளித்துவ சந்தர்ப்ப வாதிகள் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிரேம் ஆனுல் இந்து சகோதரர்களிடையே கூட எம்மைக் குறித்து ஓர் சந்தேகம் இருந்தது என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது,

இதை ஆழ்ந்த வேதனையோடு எழுந்த மூச்சில்தான் எழுதுகிரேம். காலங்காலமாக அடக்கி வைக்கப்பட்ட வேதனையின் கோடுகள் இவை. சகோதரர்களே! இத்தனை வெளிப்படையாக எழுதுவது எம்மிடையே உள்ள இடைவெளியை குறைக்கத்தான்; வேறுபாட்டை மறக்கத்தான்; எனவே இதில் எவருக்காவது மனவருத்தம் ஏற்பட்டால் சகோதரன் செய்யும் தவற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்

"இவங்கள் தொப்பி பிரட்டிகள் இவங்களை நம்பக் கூடாது" என இந்து சகோதரர்கள் கதைத்ததை எம் காதுகளால் கேட்டபோது நாம் அடைந்த துயர்; அதை வார்த்தைகளால் எழுத முடியாது. எம் இதயம் மௌனமாக இரத்தக்கண்ணீர் வடிக்கிறது. இதயத்தின் ஓரத்தில் அந்த வலி இன்னமும் எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றது.

சிங்கள சமுகத்திற்கும் எமக்குமிடையே காலங்காலமாக ஏற்பட்டு வந்த இனக் கலவரங்கள் இந்நிலையில் எம் சகோதரர்களே இவ்வாறு எம்மை இழிவு செய்யும்போது, சந்தேகம் கொள்ளும் போது எம் மனத்தின் உணர்வுகள் எப்படியிருக்கும். நாம் எம் மதத்தை இறுக்கமாகக் கைக் கொள்ளுகிரேம் என்பது உண்மையே. அதுவே எம்மார்க்கம். எம் மூதாதையர்கள் எமக்கு சொல்லிச் சொல்லி வந்தது. இது ஓர் இனத்தின் சுய விருப்பத்திலான வெளிப்பாடு. இது வல்ல எமக்கிடையே உள்ள தடை. எமக்கிடையே நிலவி வந்த சந்தேகமும் முரண்பாடுகளும் அதை வளர்க்கும் சக்திகளாலுமே எமக்கிடையே இடைவெளி கூடிவந்திருக்கின்றது.

உதாரணமாக கிறிஸ்தவ மதத்திற்கும் இந்து மதத்திற்குமிடையே உள்ள நெருக்கம் தமிழ் பேசும் எங்கள் மதமான இஸ்லாத்துக்கும் இந்துமதத்திற்குமிடையே இருக்கவில்லை.

ஒருவேளை . . . ஒரு வேளை . . .

நாம் காலங்காலமாக வியாபாரத் துறையிலேயே முக்கிய கவனம் செலுத்தி வந்திருக்கிரேம். படித்து பெரிய பெரிய பட்டங்கள் பெற்ரேர் எம்மிடையே குறைவு. எம் சமுக அமைப்பில் படிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. வசதிகள் இல்லை. பொருளாதாரம் இல்லை. பெரிய குடும்பம் ஒன்றைக் கட்டிக் காக்கும் பொறுப்பு இளமையிலேயே எம் தலை மீது சுமத்தப்படுகின்றது. எனவே எமது சமூகம் எம்மை வலுக்கட்டாயமாக ஓர் துறைக்குள் திணிக்கிறது; தள்ளுகிறது. இதில் மீட்சியடைய முடியாத எத்தனையோ திறமையுள்ளோர் இந்த சமுகப் பழுவில் நசுக்கப்பட்டிருக்கின்றனர். எனவே நாம் வியாபாரத் துறைக்கு வலிந்து தள்ளப்பட்டோம் எம் குடும்பம் தத்தளித்துக்கொண்டேயிருக்கிறது.

ஒருசில கொழும்பு முஸ்லீம் முதலாளிகள் கண்டி முஸ்லீம் முதலாளிகளை வைத்து எம்மை எடை போடாதீர்கள்.

"பசி என்று அழும் பிஞ்சுகள் எம்கண் முன்னே அந்த சிறிய வீட்டில் வாழ்ந்துவரும் பெரிய குடும்பம் எதுவித சுகாதார வசதியுமற்ற சூழல். தினம் தினம் வயிற்றுப் பாட்டிற்காக அலையும் எங்கள் வாழ்வு! இந்த வட்டத்திற்குள்ளேயே முடிந்துவிடும் எமது வாழ்க்கை. இன்று எம்மகன் அலைகின்ருன். . . . : நாளை அவன் மகன் அலைவான்

சாப்பாட்டிற்காக நாள் முழுவதும் இந்த மண்ணின் ஒவ்வோர் மூச்சு ஒழுங்கை முழுவதும் அலையும் நாம் உடுப்பதற்கே துணியில்லாத எம் பிஞ்சுகள். ஒழுகும் கொட்டில் வீடு. இவைகளின் மத்தியில் துப்பரவு சுகாதாரத்திற்கு நாம் எங்கே செல்ல.

எமக்கும் நன்ருய் வாழ விருப்பம்தான் ஆனுல் எம் சமுக அமைப்பு. திரும்பவும் ஓர்சில கொழும்பு தலைமைகளை வைத்து எம்மை எடைபோடாதீர்கள்.

உங்கள் கண்முன்னே உயர்ந்து தெரியும் முஸ்லீம் மாடமாளிகைகளை விடுத்து தூரத்தே ஒழுகிக் கொண்டிருக்கும் எம் கொட்டிலைப் பாருங்கள். எனவே இந்து சகோதரர்களே நாங்கள் உங்கள் சகோதரர்கள். உங்கள் உடன் பிறப்புகள். உங்கள் ரத்தங்கள். எம்மை புரிந்து கொள்ளுங்கள். உங்களிற்கும் எமக்குமிடையே உள்ள இடைவெளியை எதிரி பயன்படுத்த விடாதீர்கள் அந்தக் கசப்பான சம்பவங்களை மீண்டும் ஞாபகப் படுத்த வேண்டாம்,

இதுவரை யாழ்குடா நாட்டில் காட்டிக்கொடுத்த துரோகி என பலபேரை நிரூபித்து சுட்டிருக்கிறீர்கள். ஆனுல் ஒரு இஸ்லாம் மகனையாவது காட்டிக் கொடுத்தது என நிரூபிக்கவில்லை நாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு போதும் இடைஞ்சலாகவோ எதிராகவோ இருந்ததில்லை, முழு ஒத்துழைப்பும் முயற்சியும் எங்கள் பக்கமிருந்து உங்களுக்கு கிடைத்துக் கொண்டேயிருக்கின்றது. இது எங்கள் போராட்டம் நாமும் எத்தனையோ இனக் கலவரங்களை சந்தித்திருக்கிரேம். எத்தனையோ பேர் பட்டினியால் வாடுகிரேம். எமக்கெல்லாம் விடிவு இந்த சோசலிச தமிழீழ விடுதலைப் போராட்டத்தினுலேயே என்பதும் எமக்கு தெளிவே!

ஆனுல் வியாபாரத்திற்காக சாப்பாட்டிற்காக தெருத்தெருவாக அலையும் எம்மை சந்தேக கண்கொண்டு பார்க்காதீர்கள். ஒருசில எமது சகோதரர்கள் எதுவித காரணமுமின்றி காணுது போய்'ருக்கிருர்கள்.

விடுதலை இயக்கங்களே உங்களிற்கு சந்தேகம் இருப்பினும் எங்கள் மத்தியில் அவர்களை விசாரியுங்கள்.

மேலும் உங்களுக்கும் எமக்குமிடையே உள்ள இடைவெளியை அரசு நன்கு பயன்படுத்துகிறது. சமீபத்தைய கிழக்கு மாகாண சம்பவம் இதற்கு சான்று. ஒருசில விடுதலை இயக்கத்திலுள்ள புரிந்துணர்வற்ற தோழர்களால் எமக்கெதிராக ஆயுதம் பாவிக்கப்பட்டுள்ளது என்பதை ஆழ்ந்த வேதனையோடு தெரிவிக்கிரேம். ஆனுல் பொறுப்பு வாய்ந்த விடுதலை இயக்கங்கள் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இஸ்லாம் மக்களுக்கெதிராக ஆயுதம் பாவிப்போர்மீது இனி கடும் நடவடிக்கை எடுப்போம் எனக் குறிப்பிட்டு முன்மாதிரியாக நடந்து காட்டியது எமக்கு பெரும் ஆறுதலைத் தருகிறது.

ஒன்றை நாம் தெளிவாக புரிந்துள்ளோம். தமிழீழம் பிரிந்தவுடன் தமிழீழத்திற்கு வெளியே நாமிருப்பின் மிகக் கோரமாக தாக்கப்படுவோம் என்பதை புரிந்து கொண்டுள்ளோம். எமது பரம எதிரியான இஸ்ரேலிய மொசாட்டின் வருகையே இதற்கு ஆணித்தரமான சான்ருகும். மேலும் எமது கொழும்பு தலைமைகளே அவர்களோடு கைகோத்து நிற்கும்போது?

எனவே இந்து சகோதரர்களே!

காலங்காலமாக நிலவிவந்த வேறுபாட்டை மறப்போம். எமது கைகளை இறுக பிணைத்துக் கொள்வோம். நாம் ஒன்றுபட்டு சோசலிச தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

இப்படிக்கு
உங்கள் சகோதரன் ...........

# அடுத்த தலைமுறைக்கும் ...

**இந்த மழலைகளுக்காகவே, மழலைகளுக்கானதே இப்போராட்டம் அவர்களிடமிருந்து விடுதலைப் புலிகளுக்கு வந்த கடிதத்தை அப்படியே பிரசுரிக்கிறோம்.**

அன்பான என் அண்ணுக்களே!

நாங்கள் நல்ல சுகம், உங்கள் சுகம் எப்படி. போன முறை பேப்பரிலை ஓர் மழலையின் மன உணர்வில் என்ற பகுதி போட்டனிங்கள். அப் பகுதி எங்களுக்கு பிடிக்கேலை. அந்த குழந்தை மாதிரி நாங்க பயப்பிடமாட்டம். நாங்கள் உங்களோடை சேர்ந்து போராடுவம். உங்களுக்கு உதவி செய்வம். அது சரி நீங்கள் எங்கை இருக்கிறியள். நாங்கள் முந்தி உங்களைப்பற்றி நினைச்சு பயப்பிட்டனுங்கள். பிறகு தான் நீங்களும் எங்களைப்போல எண்டு விளங்கிச்சு.

உங்கடை கேள்வி பதிலுக்கு எங்கடை கேள்வி உங்களிலை எத்தனை பேர் இருக்கிறியள்.

வேறு புதினமில்லை.

இப்படிக்கு
உங்கள்----------



எம் உயிரினும் இனிய செல்வங்களே!
தமிழீழ மழலைகளே!
பிரகாசம் மிக்க உங்கள் எதிர்காலத்திற்காக எம் வாழ்த்துக்களும்! வந்தனங்களும்!!

நாமும் உங்களைப்போல் வேதனையை சொந்தமாக கொண்ட இந்த மண்ணிலே சிறு குழந்தைகளாக அந்த புளியமரத்தின் கீழ் அரைக்காற்சட்டை அவிழ அவிழ ஓடிவிளையாடியவர்களே. ஆனால் இந்த மண்ணில் காலங்காலமாக தொடர்ந்து வந்த வேதனையின் வெடிப்பால் நாம் வேங்கைகளானோம்! அந்த அடக்குமுறை ஒடுக்குமுறை இராணுவத்தின் கொலைவெறி, கொடூரங்கள் இவைகள் உங்கள் சந்ததிக்கும் தொடரக்கூடாது என்பதற்காகவே முந்திய சந்ததி செய்த தவற்றை செய்யாமல் ஆயுதம் ஏந்தினோம்-



ஓ... அந்த பசுமையான நினைவுகள் இப்போதும் எம் கண்முன் விரிகின்றது. எம் குட்டிகளே இளமைப் பருவம் பொன்னானது. இதில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வோர் பாதச் சுவடும் உங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றது. எம்மண்ணை சுதந்திர நாடாம் தமிழீழத்தை கட்டி எழுப்ப வேண்டியது நீங்களே.

எம் மழலைகளே நாம் ஒரு போதும் எம்மை எண்ண முடியாது இந்தஉயிர்களின் வாழ்வு எக்கணமும் நிச்சயமற்றதென்றாலும் கண்ணுக்குத் தெரியாமல் போன 137 உயிர்கள் ஒரு போதும் எம் நெஞ்சை விட்டு அகன்றதில்லை. எம் எல்லோரினதும் நினைவான இலட்சிய தீபம் சுடர் விட்டு பிரகாசித்துக் கொண்டேயிருக்கின்றது அந்த ஒளியில் ஆயிரம் ஆயிரம் விடுதலை உயிர்கள் பிறப்பெடுத்துக் கொண்டேயிருக்கின்றன அடுத்த களத்தில் மீண்டும் உங்களை சந்திக்கிறேன்.

இப்படிக்கு உங்கள்
**உங்கள் புலி மாமா**

---

## எமது இயற்கை வளங்களைப் பாதுகாப்போம் பயன் படுத்துவோம்

எமது சுதந்திரப் போராட்டத்தை சொல்லொணு இன்னல்களினூடாகவே வென்றெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். எமது பிரதேசங்களிலுள்ள ஒவ்வோர் மூலவளங்களையும் நாம் பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும். இன்று எங்கு பார்த்தாலும் இயந்திர மயமாக்கப்பட்ட நிலையிலேயே எமது மண்ணின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. எமது இயற்கை வளங்களில் தங்கி நிற்காது அந்நியப்பட்டு நிற்கும் நிலை தொடருமானுல் நாம் பட்டினிச் சாவையே எதிர் நோக்க வேண்டி நேரிடும்.

காலத்துக்குக்காலம் எமது மண் திட்டமிடப்பட்டு அடக்குமுறையாளரினுல் நசுக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்தும் இந்நிலை தொடரும் என்பதில் ஐயமே இல்லை. எமது பிரதேசங்களில் உள்ள இயற்கைவளங்களை பாதுகாக்கவும் பயன்படுத்தவும் நாம் முன்வர வேண்டும். தமிழீழப் போராட்டம் உச்சக் கட்டம் அடைந்து வரும்வேளை சிறிலங்கா இனவெறி அரசு எமது பிரதேசத்திற்கான சகல தொடர்பையும் துண்டிக்கும். இதனை தடை செய்வதன் மூலம் நாம் தோற்றுப் போவதாகவும் பட்டினிச் சாவை எதிர் நோக்கி சரணடைய வைத்து விடலாம் என்றும் அடக்குமுறையாளர் கனவு காண்பார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறு அளவிலான நிலப் பரப்பளவைக் கொண்டு விவசாய நடவடிக்கைகளை ஆற்றும் மக்கள் இயந்திரவலு உபயோகத்திலேயே கருத்தாக உள்ளனர். பெருமளவிலான நிலப்பரப்பளவைக் கொண்ட உற்பத்தியாளர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் உழவு யந்திரம் பயன்பாடு அவசியமாகிறது. அவர்கள் ஒரே தடவையில் உற்பத்தி நடவடிக்கைகளை காலதாமதம் இன்றி மேற்கொள்ள தேவையாகிறது. ஆனுல் எமது மக்கள் இங்குள்ள இயற்கை வளங்களை அழியவிட்டுக் கொண்டு இருப்பது கவலைக்குரியதே. நாம் இயற்கையோடு ஒன்றி வாழவேண்டும். இது தவிர்க்க முடியாதது.

நாம் முதலில் அந்நியச் சார்பில் இருந்து விடுபடுதல் வேண்டும். முதலாளித்துவ அரசின் உற்பத்திப் பொருட்களின் உபயோகங்களை நாம் முற்ருக தவிர்த்துக் கொள்ள வேண்டும். தேநீர் மற்றும் பிற உணவுப் பொருட்களிலும் நாம் அவர்களைப் பார்த்துக் கொண்டிருத்தல் மடமையானது.

எமது வளங்களை முறையாக பேணுவோம். பழகிவந்த பழக்கங்களை மாற்றிக்கொள்ள சிரமம் ஏற்படுவது இயற்கையே. எனவே இப்போதிலிருந்தே பழகிக் கொள்வோம். தேநீருக்கு பதிலாக நாம் எமது மண்ணில் விளையக்கூடிய வரண்ட பயிர்ச்செய்கையாக மல்லியை பயிர் செய்வதன் மூலம் உடல் நலத்துக்கும் உகந்த பானத்தை தயாரிக்கலாம். மற்றும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் நாம் சோழம், வரகு. குரக்கன், பயறு, தினை, போன்ற சிறு தானியப் பயிர்களை பயிரிடல் வேண்டும். சிறுதானிய உற்பத்தியில் நாம் பெரிதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

விடுதலை நோக்கி நாம் எமது மண்ணேடுஒன்றி எமது உடல், பொருள், ஆவியினைத்தையும் ஈய்ந்து உழைக்க முன்வர வேண்டும். எனவே எம்மால் கைவிடப்பட்ட பழைய விவசாய வளங்கொழிக்கும் மரபை மீண்டும் கைக்கொள்வோம்.

மாடுகளைக கொண்டு உழுவோம். நாமே அறுவடை செய்வோம். களை பிடுங்குவோம். எமது மக்கள் ஒன்று சேர்ந்து கூடிக் களிக்கும் காலம் உதயமாகட்டும். அந்த இனிமையான பண்ணை நாட்களை எம் மண்ணில் செய்வோம்.

காற்ருடிமூலம் நீர்இறைக்கும் முறையைக் கையாண்டு நீர்பாசனம் செய்வோம். இதன் மூலம் குறைந்த ஆக்கச்செலவு மட்டுமே முதலில் ஏற்படும். இவ்வாறு நாம் எம்மில் தங்கும் நிலைக்கு தயாராக வேண்டும். மாடுகளை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம் அவற்றின் சாணத்தை கொண்டு உயிரியல்வாயு உற்பத்தி செய்து கொள்ளப்படுகிறது. இதன்மூலம், மின்சாரத் தேவையை நாம் பூர்த்தி செய்துகொள்ளலாம். எனவே முதலில் இவ்வளங்களை நாம்

(7பக்கம் பார்க்க)

# தமிழீழ மண்ணில் தொடர்ந்து வரும் சாத்வீகப் போராட்டங்கள்

- ஓர் ஆய்வு -

இன்றைய காலகட்டத்தில் தமிழீழ மண்ணிலே, அதிலும் குறிப்பாக யாழ் குடாநாட்டிலே தொடர்ந்து வரும் சாத்வீகப் போராட்டங்களின் போக்கை ஆராயவேண்டியது இன்றியமையாததே. இந்த வகையில் எம் மண்ணில் அகிம்சைப் போராட்ட முன்னெடுப்புகளாக ஹர்த்தால்கள் பாடசாலைப் பகிஸ்கரிப்புகள். வேலை இடைநிறுத்தம், ஸ்தம்பிப்பு, உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள். போன்றன தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

## சாத்வீக போராட்டம் மக்களை அரசியல் மயப்படுத்தவும் போராட்ட உணர்வோடு ஒன்று திரட்டவுமே!

ஒருசமயம் அனுரா பண்டாரநாயக்கா உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்த சமயம் சிங்கள இனத்தவனான அனுரா உண்ணாவிரதமிருந்து இறந்தால் கூட தான் அதைப்பற்றி அக்கறைப்படுத்தப் போவதில்லை என அறிவித்தவன் ஜே. ஆர். பல்கலைக்கழக மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதமிருந்து சாவை தொட்ட சமயம் கூட "உண்ணாவிரதமிருப்பது எனக்குத் தெரியாதே" என அறிவித்த இனவெறியனான ஜே. ஆர், இப்போராட்டங்களைப் பற்றி சிறிதும் அலட்டிக்கொள்ளப் போவதில்லை என்பது தெளிவு.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பொறுத்தவரை சாத்வீகப் போராட்டங்கள் மக்களை போராட்ட உணர்வில் வைத்திருக்கவும், மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டவும், மக்களுக்கு போராட்டம் பற்றிய தெளிவை ஏற்படுத்தி அரசியல் மயப்படுத்தவுமே பெருமளவு உதவும். ஆனால் இப்போராட்டம் பற்றி எதுவித தெளிவும் இல்லாமல் எழுந்தமானமாக பிழையான போக்கில் சாத்வீக போராட்டங்கள் நடைபெறுவது மிகத்தவறானதே.

## அர்த்தமற்ற உரிமை கோரப்படாத பாடசாலைப் பகிஸ்கரிப்பு ஹர்த்தால் நிராகரிக்கப்பட வேண்டியனவே!

எதுவித காரணமுமின்றி உரிமை கோரப்படாமல் மேற்கொள்ளப்படும் ஹர்த்தால்கள் பாடசாலைப் பகிஸ்கரிப்புகள், ஸ்தம்பிப்பு, வேலை இடைநிறுத்தம் தொடர்ந்து வருவது வேதனைக்குரியதே. மக்கள் அல்லது மாணவர்கள் ஒருமித்து எதுவித வற்புறுத்தலுமின்றி உணர்வு பூர்வமாக, ஒன்றுபட்டு ஹர்த்தாலோ அல்லது பாடசாலைப் பகிஸ்கரிப்போ, ஸ்தம்பிப்போ, இடைநிறுத்தமோ மேற்கொள்வது வேறு. ஆனால் ஆயுதமுனையில் கடைகளைப் பூட்டி மக்களை மிரட்டி மாணவர்களை வெருட்டி கட்டாயமாக ஹர்த்தால், பாடசாலைப் பகிஸ்கரிப்பு, வேலை இடைநிறுத்தம், ஸ்தம்பிப்பு போன்றவற்றை மேற்கொள்ள வைப்பது எந்த வகையில் பயனுள்ளது, மேலும்

சம்பந்தப்பட்டவர்கள் இதன்மூலம் சாதிப்பது என்ன?

சிறிலங்கா அரசு எம் மாணவர்களின் கல்வியை, எம் மக்களின் தொழில்களை திட்டமிட்ட ரீதியில் சீர்குலைத்து வருகின்றது. இந்நிலையில் நாமே இதைக் காரணமின்றி சீர்குலைப்பது தற்கொலைக்கொப்பானதே. அன்றாடம் உழைத்து அதையே சாப்பிடும் மக்கள் இத்தகைய ஹர்த்தால் ஸ்தம்பிப்பு, வேலை இடைநிறுத்தத்தால் வேதனையும் விரக்தியும் அடைவது இயல்பானதே.
வேலை இடைநிறுத்தம் அல்லது ஸ்தம்பிப்பு என 2 மணித்தியாலம் வாகனங்களை ஓடாமல் செய்து கடையில் தேனீர் குடித்தவர்களைக் கூட தேனீர் குடிக்காமல் செய்வது மக்களை எந்தளவில் அரசியல்மயப்படுத்தும்? போராட்டத்தினுள் வைத்திருக்கும்? போராட்டம் பற்றிய தெளிவை ஏற்படுத்தும்?

இத்தகைய செயற்பாடுகளால் ஒருதுளி அளவு கூடப் பயன் இல்லை என்பதில் மக்கள் தெளிவாகத்தான் உள்ளனர். ஆனால் இதை வற்புறுத்தி செய்ய வைக்கும் அமைபபுகளுக்கும் சக்திகளுக்குமே இதை சொல்ல வேண்டியுள்ளது.

இது சம்பந்தமாக பொறுப்பு வாய்ந்த விடுதலை இயக்கங்கள் அனைத்தும் எம்முடன் ஓர் உடன்பாட்டினுள் வந்துள்ளன.

தமிழீழ மக்களின் சுதந்திரமான உணர்வுகளையும் செயற்பாடுகளையும் நாம் மதிக்கும் அதேவேளை இத்தகைய செயற்பாடுகளை எதுவித காரணமுமின்றி உரிமை கோராமல் தொடர்ந்து மக்களை மிரட்டி ஆயுத முனையில் செய்து வருவோர் மக்கள் விரோத சக்திகளாகவே இனம் காணவேண்டிநேரிடும்.

## உண்ணாவிரதம் ஊர்வலத்தின் அடிப்படை நோக்கம்

மேலும் தமிழீழ மண்ணிலே 4பேர் சேர்ந்தவுடன் உண்ணாவிரதமும் 40பேர்சேர்ந்தவுடன் ஊர்வலமும் நடைபெறுவது இப்போராட்டங்களின் தன்மையையே கொச்சைப்படுத்துவதாக அமைகின்றது. மீண்டுமொரு முறை இப்படித் தொடரும் போராட்டங்களால் அப் போராட்டங்களின் நோக்கம் நிறைவேற்றப்படுகிறதா எனப் பார்க்கப்படவேண்டியுள்ளது.

மக்கள் வெறுமனே ஓர் குறிப்பிட்ட நேரம் சாப்பிடாமல் இருப்பதன் மூலம் மக்கள் சக்தி ஒன்று திரட்டப்படுதல் அல்லது அரசியல் தெளிவு ஏற்படுத்தப்படல் நடைபெற முடியாது. தமிழீழ மண்ணிலே சிறிலங்கா அரசுக்கெதிரான உண்ணாவிரதத்தின் அடிப்படை நோக்கம் மக்கள் அனைவரையும் கட்டுப்பாடாக ஆத்ம சுத்தியோடு ஓரிடமாக கொண்டுவருதல்! ஒன்று சேர்ந்த மக்களுக்கு போராட்ட தெளிவை, உணர்வை ஊட்டி மக்களை தமிழீழ விடுதலைப் பாதையினுள் கொண்டு வருவதாகவே அமைய வேண்டும். எத்தனை உண்ணாவிரத போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது என்பது முக்கியமல்ல. நடைபெற்ற உண்ணாவிரத போராட்டத்தில் எத்தனை மக்கள் போராட்ட உணர்வோடு அரசியல் மயப்படுத்தப்பட்டனர் என்பதே முக்கியம்.


மேலும் ஒவ்வொர் நாளும் ஒவ்வொர் பாடசாலையை குழப்பி சிறு சிறு ஊர்வலங்கள் செய்வது தேவைதானா எனப்பார்க்க வேண்டியுள்ளது. ஊர்வலங்கள் மக்கள் சக்தி அனைத்தும் ஒன்றாக திரண்டு ஓர் ஒற்றுமையை வளர்க்கவும் சரியான அரசியல மயப்படுத்தப்பட்ட கோஷங்களை எழுப்பி ஓர் மாபெரும் எழுச்சியாக செய்வதே முழு வெற்றியைத் தரும். ஆனால் பாடசாலைகளை குழப்பி சிறு சிறு குழுக்களாக ஊர்வலங்கள் தொடர்வது அனாவசியமற்றதொன்றே.

ஊர்வலங்களில் அமைப்பாக்கப்பட்ட மாணவர் சக்தியை விட ஓய்வு நேரத்துடன் வீட்டிலுள்ள மக்கள் சக்தி ஒன்று திரட்டப்படவேண்டும்.

இத்தகைய ஒருங்கமைவு அற்ற முறையில் தொடர்ச்சியாக சாத்வீக போராட்டங்கள் தொடர்வது மக்களை வேதனைக்கும விரக்திக்குமே இட்டுச் செல்லும். எனவே இந்த விடயத்தில் அனைத்து அமைப்புகளும் சக விடுதலை இயக்கங்களும் எம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

# மக்களோடு புலிகள்

இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்ஊர் உற்பத்திக் குழு தமிழீழ மக்களுக்கு அத்தியாவசியமான பல்வேறு உள் ஊர் உற்பத்தி செயற்திட்டங்களை உருவாக்கி ஊக்குவித்து செயற்படுத்தி வருகின்றது. போராட்டம் கூர்மையடையும் காலகட்டத்தில் நமது அன்றாட அத்தியாவசிய பொருட்கள் அனைத்தையும் தமிழீழத்திலே உருவாக்கும் சுதேச பொருளாதார அமைப்பை கட்டியெழுப்புவதே இக் குழுவின் முக்கியமான பொறுப்பாகும்.



இந்த வகையில் நாம் அன்றாடம் அத்தியாவசியமாக பாவிக்கும் பொருட்களை உள் ஊர் உற்பத்திக் குழு உற்பத்தி செய்து வீடு வீடாகவும் வேறு வழிகளிலும் விற்பனை செய்து வருகின்றது. உள் ஊர் உற்பத்தியில் மக்களை ஊக்குவித்தலும், அதன் பாவனையின் அத்தியாவசியத்தை மக்களுக்கு எடுத்துரைப்பதும் இக்குழுவின் முக்கிய செயற்பாடுகளாகும்.

காலை எழுந்தது முதல் அன்றாடம் நாம் பாவிக்கும் அத்தனை பொருட்களும் சிறிலங்காவிலிருந்தே வருகின்றன. நன்கு ஆழ்ந்து சிந்திப்போமானால் நாம் ஒவ்வொரு சிறு தேவைக்கும் அந்நிய மண்ணிலேயே தங்கியிருக்கிறோம்,

அந்நியனின் ஆதிக்கம் இராணுவத்தால் மட்டுமல்ல இராணுவ ஆதிக்கத்திலிருந்து எம் மண் விடுபட்டால்கூட நாம் விடுதலையடைந்து விட முடியாது, உணவு பொருளாதாரக் காரணிகள் அந்நிய ஆதிக்கத்திலிருந்து படிப்படியாக விடுவிக்கப்பட்டு நாம் சுதேச உற்பத்தியில் ஓரளவு தன்னிறைவு காணப்படின் மட்டுமே நமது நாட்டை கட்டியெழுப்பி நம்மை நாமே ஆழ முடியும்.



இன்று நாம் உபயோகிக்கும அன்றாட அத்தியாவசியமான பொருட்களில் பெரும்பாலானவற்றை இங்கேயே உற்பத்தி செய்வதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளோம். தமிழீழமக்களும் இங்குள்ள ஒவ்வொரு வளத்தையும் பயன் படுத்தி சுதேச பொருள் உற்பத்தியில் மிக முனைப்புடன் பங்காற்றி வருகிறார்கள்,

இந்திய விடுதலைப் போரில் சுதேச பொருள் உற்பத்தியும் பாவனையும் ஓர் முக்கிய போராட்டமாயிருந்தது. இந்திய மககள் ஒவ்வொருவரும் விடுதலைப் போராட்ட பங்களிப்பாக தம் சுதேச பொருள் தரம் குறைவாக இருந்தாலும் சுதேச உணர்வோடு அதனையே பாவித்தார்கள்.

தமிழீழ விடுதலைப் போரின் கூர்மையில் சிறிலங்காவினுடைய தொடர்பு துண்டிக்கப்பட்டு சிறிலங்காப் பொருட்கள் தமிழிழத்திற்கு வருவதே தடைப்படும். எனவே ஆயுதமேந்திப் போராடுதல் தமிழீழ விடுதலையில் எந்துணை முக்கியமானதோ அதேயளவு முக்கியமானதே சுதேச பொருள் உற்பத்தியும் பாவனையும். எனவே நாம் இன்றிலிருந்தே தீர்க்கமான முடிவாக தமிழீழ விடுதலைப் போராட்ட பங்களிப்பாக சுதேச பொருள் உற்பத்தியிலும் பாவனையிலும் ஈடுபடுவோம்.

### மாணவர் கல்வியில் ஏற்படும் சீர்குலைவுகள்; ஒழுங்கு கட்டுப்பாடற்ற போக்குகள்

# இந்நிலை தொடரின் எமது எதிர்காலம்?

**இன்றைய கால கட்டத்தில் மாணவரின் 'கல்வியில் 'ஏற்படும் சீர்குலைவுகள்; மாணவர் மத்தியில்' நிலவும் ஒழுக்கக்கேடு, கட்டுப்பாடற்ற தன்மை தான்தோன்றித் தனமான தறிகெட்ட போக்கு இவற்றின் பின் விளைவுகளை நன்கு ஆராய்ந்து சிந்திக்க வேண்டிய கட்டாயக் கடமையில் உள்ளோம் நடைமுறைக் கால நிகழ்வுகளினூடான உண்மைகளையே நாம் இந்த விடயத்தில் 'ஆராய்கிறோம். எம் மாணவச் செல்வங்களின் எதிர் காலத்தைப் பற்றி ஆசிரியர்கள், பெற்றோர்கள், சக அமைப்புகள், விடுதலை ஸ்தாபனங்கள் அனைவரும் ஒன்றுபட்டு அவர்களின் எதிர்காலததை பிரகாசப்படுத்த முன்னின்று உழைப்போம்**

தமிழீழ விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்து வரும் இன்றைய கால கட்டத்தில் பல்வேறு இன்னல்கள் நெருக்கடிகள் ஏற்படுவது இயல்பானதே. இந்த வகையில் மாணவரின் கல்விக்கு ஏற்பட்ட இயல்பான இடையூறுகள் ஒருபுறமும், எதுவித தெளிவுமற்ற முறையில் சில சக்திகளால் மாணவரின் கல்வி சீரழிக்கப்படுவதும் மாணவரிடையே காணப்படும் அக்கறையின்மை, ஒழுங்கு கட்டுப்பாடற்ற போக்குகளும் ஓர் இருண்ட சமுதாயத்தை தோற்றுவிக்கும் அபாய நிலையையே சுட்டி நிற்கின்றது.

### போராட்ட காலத்தில் கல்வி மிக இன்றியமையாததே.

போராட்ட காலம்தானே படிப்பெதற்கு? என்ற கருத்து மாணவர் மனதில் ஆழமாக வேரூன்றி வருகின்றது, ஆனால் கல்வியின் அத்தியாவசிய தேவையையும் பொறுப்பையும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட அத்தனை நாடுகளும் தெளிவாக உணர்ந்திருக்கின்றன. சொல்லொணு இடைஞ்சல்கள் துன்ப துயரங்கள் எதிரியின் கொடூர அடக்கு முறைகள் இவைகள் மத்தியிலும் கல்வி தொடரப்பட்டுக் கொண்டேயிருந்திருக்கின்றன. ஆயுதங்களுடன் மாணவர்கள் பரீட்சை எழுதியதும் கெரில்லாத்தளங்களில் கல்வி போதிக்கப்பட்டதும் ஏனைய நாட்டு விடுதலைப் போராட்ட உண்மைகள்.

மேலும் இது ஓர் முதலாளித்துவ அமைப்பு முறைக் கல்வியே ஏட்டுச் சுரக்காயாக நடைமுறை வாழ்க்கைக்குதவாமல் வெறும் பரீட்சை சித்திக்காகவே இக் கல்வியமைப்பு என்பது உண்மையே. இதற்காக நாம் இக் கல்வியமைப்பை நிராகரிப்பதோ புறக்கணிப்பதோ மிகத் தவறுனதே. போராட்ட வளர்ச்சிக் காலகட்டத்தில் இக்கல்வியமைப்பு வாழ்வதற்கான கல்விக்குரிய குணும்சங்களோடு படிப்படியாக மாற்றப்பட்டு ஓர் புரட்சிகர கல்வியமைப்பாக மலர வேண்டும்,

### விடுதலைப் போராளிகள் மாணவச் செல்வங்களுக்கு கூறுவது;

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அனைவரினதும் பங்களிப்பு இன்றியமையாததே. ஆனுல கல்வியை துறந்து போராட்டததினுள் ஈடுபடுவது மிகத் தவருனதே. நீங்கள் ஒழுங்கமைவாக புரட்சிகர கலவிக்குரிய குணும்சங்களோடு கல்வியை பெற்று ஓர் புரட்சிகர சமுதாயத்தின் பிரதிநிதியாக மாறுவதே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காற்றும் பெரும் பங்களிப்பாகும். எத்துணை சிரமததின் மத்தியிலும ஒழுங்கோடும் கட்டுபபாடோடும் உங்களை நெறிப்படுத்தி கல்வியை தொடரவேணடும்.

பெற்றோர்களே, ஆசிரியர்களே எதிர்கால ஒழுங்கமைவான முன்னேற்றகரமான சமுதாய சிருஷ்டிகர்த்தா நீங்கள தான் உங்களின் கணடிபபுகள முயற்சிகள், ஊக்கங்களே மாணவர்களை நல்வழிபபடுததும்,

மாணவர் மத்தியில் நிலவும் அக்கறையின்மையை போக்கி கல்வியின் ஆக்கபூர்வமான தேவையை எடுத்தியம்பி வாழ்வதறகான கல்வியை போதிக்க வேண்டியது உங்கள் கடமையே மாணவாகள் கட்டுப்பாடோடும் நல் ஒழுக்கத்தோடும் வளர்வதற்கு கண்டிப்பு மிக மிக இன்றியமையாததே.

நாங்கள் ''உங்களுடைய பெடியள்'' தான் நீங்கள் எங்களை கட்டுப்பாடோடும் கண்டிப்போடும் வளர்த்ததால்தான் இன்று நாமும் எதிர்கால சமுதாய முன்னேடிகளாக மாறனேம். நல் ஒழுக்கத்தை கடைப்பிடிக்கிறோம். பாடசாலையிலுள்ள அனைத்து மாணவர்களும் உங்களின் பூரண கட்டுப்பாட்டினுள்தான் அவர்களை கணடித்து கட்டுபபாடோடு நல்ஒழுக்கமுள்ள பிரஜைகளாக மாற்றுங்கள் எதுவித தயக்கமுமின்றி நீங்கள் செயற்பட முழு ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் செய்ய நாம் தயாராக உள்ளோம்.

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். அவனின் ஒவ்வொரு செயற்பாட்டையும் அவதானித்து அவனை கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்து, ஊக்குவித்து அவனை நற் பிரஜையாகக வேண்டும்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் எம் எதிர்கால செல்வஙகள் குறித்து அக்கறையற்றருப்பின் ஓர் அநாகரிகமான படிப்பறிவற்ற காட்டுமிராண்டி சமுதாய அமைப்பே எதிர்காலத்தில் உருவாகும். எனவே நாம் கண்டிப்பாக எதிர்கால சந்ததியில் அதிக அக்கறை செலுத்துவோம்,

### சக அமைப்புகளே விடுதலை இயக்கங்களே

மாணவரின் கல்வியை சீர்குலைக்கும் எந்தவகையான செயற்பாட்டையும் உடன் கைவிடுவோம். மாணவரின் முன்னேற்றத்தில் எம் எதிர்கால சந்ததியின் முன்னேறறத்தில் பெறறோருககும் ஆசிரியருக்கும் கை கொடுப்போம்-

- ★ பாடசாலை பகிஸ்கரிப்புகள், தொடர்ச்சியான ஹர்த்தால் உண்ணுவிரதம் ஊர்வலம் உடன் நிறுத்தப்பட வேண்டும்.
- ★ பாடசாலை உபகரணங்கள் கொள்ளையிடல் சேதப்படுத்தப்படல் பரீட்சை குழப்புதல் பரீட்சையில் ஆள்மாருட்டம் நிறுத்தப்பட வேண்டும்.
- ★ பாடசாலைகள் அதிபரினதும் ஆசிரியரினதும் பூரணகட்டுப்பாட்டினுள் தான் இங்கு விடுதலை இயக்கமோ அல்லது வேறு அமைப்புகளோ அதிகாரம் செயய முடியாது செய்தலும் உடன் நிறுத்தப்பட வேண்டும.
- ★ மாணவர்கள் ஒழுங்கற்று பாடசாலைக்கு வராமல் மினி சினிமா என்றும் வேறு வேலைகள என்றும் திரிவது வழமையாகி விட்டது. மினிசினிமா சினிமா உரிமையாளர்கள் பாடசாலை நேரத்தில் மாணவர்கள் மினிசினிமா சினிமாவிறகு வநதால் கண்டிப்பாக அனுமதிக்க கூடாது. வேறு வேலையாக திரிந்தாலும உடன் கணடித்து பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் மாணவர்களின போககுவரத்து சமபநதப்பட்ட விடயங்களிலும் பஸ்சாரதிகள, மினிபஸ் சாரதிகள பூரணமாக ஒத்துழைக்கவேண்டும்,
- ★ ஆசிரியரின் பெற்றோரின் கண்டிப்புக்கு கட்டுப்படாமல் "இயக்கத்திற்கு ஓடி விடுவேன்'' என வெருட்டும் இளைஞர்கள் இயக்கத்தில் கூட ஒழுங்கோடும கட்டுப்பாடோடும இருக்க மாட்டார்கள். குறப்பாக மாணவர்களை இயக்கங்களில் முழு நேரமாக்காமல் விடுதலை இயக்கங்கள் ஒத்துழைக்க வேண்டும்-

## புரட்சியைக் காப்போம்



சமயத்தில் இரு எழுத்துகளை (ஆமி!) உச்சரிக்காமல் விடுதல் விடுதலைப் போராட்டத்தில் பாரிய இழப்பை ஏற்படுததலாம்.


# தாளுடை மறந்தாலும் தசையாடும்

ஆறு கோடிக்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் உலகின் சகல நாடுகளிலும் பரந்து வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் இன ரீதியில்-மொழி ரீதியில் அடக்குமுறைக்குள்ளாகி வரும் தமிழினத்திற்கு ஓர் நாடில்லை.

காலங்காலமாக சகல நாடுகளிலும் ஒடுக்குமுறைக்குள்ளாகி வரும் தமிழினம் தனக்கொரு நாடு அமையவேண்டும் என்பதில் தெளிவாகியுள்ளது; உறுதியாய் உள்ளது.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் பேசும் மக்களில் ஓர் தனித்தேசிய இனமாகி தனி நாடு அமைவதற்கான பூரண பரிணாமம் பெற்ற சூழ்நிலை தமிழீழ விடுதலை போராட்டத்திற்கேயுண்டு: இந்த வகையில் இப்போராட்டத்தை காக்க-புரட்சியைக் காக்க தனி நாடு அமைய முழு முயற்சி செய்யவேண்டிய கட்டாயக் கடமை ஒவ்வொரு தமிழ் பேசும் மகனுக்குமுண்டு.

இந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தாயாக விளங்கும் தமிழகம் தன் குழந்தை நசுக்கடிக்கப்பட்டு கொல்லப்படுவதை எப்படிப் பொறுப்பாள். தமிழீழ சிசுவை தன் வயிற்றில் கருக்கொள்ள வைத்து தன் உதிரத்தையே கொடுத்து கண்ணும் கருத்துமாக அதனை பாதுகாத்து வளர்த்துவரும் தமிழக அன்னை, குழந்தையை கருச்சிதைவு செய்வதைக் கண்டு குமுறி எழுந்தாள்.




ஆம்! எமக்கெல்லாம் தாயாகவும் தந்தையாகவும் இருந்து எம்மை அன்போடு அரவணைத்து பாதுகாத்து வரும் தமிழகம் மீண்டுமொரு தடவை எழுச்சியடைந்தது. சமீப காலமாக தமிழ் பேசும் மக்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையை கண்டே தமிழக மக்கள் எழுச்சியடைந்தனர். உண்ணாவிரத போராட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஏன் தன் உயிரைக் கொடுக்கும் தீக் குளிப்புகள் கூட இடம் பெற்றுள்ளன.

தன் இனத்திற்கேற்படும் தன் இரத்தத்திற்கேற்படும். இன்னல்களை தமிழகம் ஒரு போதுமே பார்த்துக் கொண்டிருந்ததில்லை; பார்த்துக் கொண்டிருக்கப் போவதுமில்லை.

83 இனக்கலவரத்தில் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தமிழீழ மண்ணிலும் சிறிலங்காவிலும் ஒடிய தமிழீழ மக்களின் இரத்தம் எம்மை தமிழகத்தையும் பிரிக்கும் கடலில் கலந்தது தன் இனத்திற்கேற்பட்ட துயரைக் கண்டு கடலைக் கடக்கவே தயாரானது தியாகப்பயணம்!

தமிழீழ மக்கள் இடர் தீர தம் உயிரைத் துச்சமாக மதித்து ஈழப் பிரச்சனையை இந்தியா முழுக்க எதிரொலிக்க வைத்த தமிழக உயிர்கள்!! தமிழீழ மக்களுக்காக சிறை சென்ற தமிழ் நாட்டு மக்கள்!!!

இன்றும் தமிழக மக்களின் மனதில் அந்த உணர்வுகள் கொழுந்து விட்டெரிந்து கொண்டேயிருக்கின்றது.



ஈவு இரக்கமற்ற கொலை வெறியனுக்கு பக்கத்தில் நாமிருக்கும் போதும் எம்மை காக்கும் அன்னை எம்பக்கத்தில் இருக்கும் ஆத்ம உணர்வில்தான் எம் போராட்டம் தொடர்கிறது. தன் வயிற்றில் கருக்கொண்ட தமிழீழக் குழந்தைக்கு இரத்தத்தையும், சதையையும் கொடுத்து அதை வளர்த்து வரும் தமிழக அன்னையாலேயே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றி சாத்தியமாகும். அது நிச்சயமான உண்மையும் கூட.

# தமிழீழ மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலியிடமிருந்து

## மக்கள் எம்மை விமர்சிக்க வேண்டும்

தமிழீழ விடுதலைப் போராட்டமே தமிழ்பேசும் மக்களுக்கானது. அவர்களின் உரிமைக்கானது. அவர்களின் சுதந்திரமான சுபீட்சமான வாழ்வுக்கானது. நாம்ஆயுதமேந்தி போராடுவதே எம் மக்களின் விடிவிற்காக. எமது இயக்கம் மிகப்பரவலாக விரிவடைந்து இன்று தமிழீழ மக்கள் மத்தியில் இரண்டறக் கலந்து பல்வேறு வேலைத் திட்டங்களை, செயற்படுத்தி வருகின்றது.

இயக்கத்தினுள் பூரண கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நாம் அதி கூடிய அளவு பேணி வருகிறோம். எந்தஒருமுடிவும் தலைமைப் பீடத்தின் அனுமதியுடனேயே நடை முறைப்படுத்தப் படுகின்றது.

மக்களை பாதிக்கும் துன்புறுத்தும் எந்தச் செயலை (எமதியக்கத்தை சேர்ந்த) எவர் செய்தாலும் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க இயக்கத்திற்கு பூரண அதிகாரமுண்டு இத்தகைய கட்டுப்பாடும் கட்டுக்கோப்பும் இயக்கத்தினுள் பூரணமாக நடை முறைப் படுத்தப் படுவதால் எமதியக்கத்திலுள்ளோர் நூற்றுக்கு நூறுவீதம் எது வித தவறுமின்றி நடப்பார்கள். என அடித்துச் சொல்லவில்லை.

நடை முறையில் எமதியக்க உறுப்பினர்களின் எத்தனையோ குறைகளை குற்றங்களை பிழைகளை மக்கள்சுட்டிக்காட்டி விமர்சித்ததை யடுத்து நாம் எம்மை திருத்தியிருக்கிறோம்; புனரமைத்துக் கொண்டிருக்கிறோம்.

எமதியக்க நடை முறையில் எமது உறுப்பினர்களின் நடத்தையில் குற்றம் குறைகள் உண்மையாயிருப்பின் தங்கு தடையின்றி எம் மக்கள் யாரும் இதைப்பற்றி பூரண சுதந்திரத்துடன் விமர்சிக்கலாம்.

எமது இயக்கம் நூற்றுக்கு நூறு வீதம் இலட்சியத் தன்மை உடையதல்ல தவறுகள், குற்றங்கள் குறைகள் சுட்டிக் காட்டப்படும் போது தான் நாம் எம்மை திருத்திக் கொள்ளமுடியும் இயக்கம் எதுவித பிழையுமின்றி நடக்கும் பழுத்த அனுபவஸ்தவர்களைக் கொண்டதல்ல, சாதாரண உங்கள் மத்தியில் உள்ள "பொடியளை"க் கொண்டு கட்டப்பட்டதே இயக்கம். இந்த இயக்கத்தை திருத்த வேண்டிய சீரமைக்க புனரமைக்க வேண்டிய பொறுப்பு மக்களுடையதே. உங்கள் மத்தியில் உள்ள மாமனையோ, மச்சானையோ, சகோதரர்களையோ, பிள்ளைகளையோ கொண்டது தான் இயக்கம் நடைமுறை கால வாழ்வில் இவர்கள், குணதிசயங்களை தூக்கி எறிந்து துறவியானவர்களல்லர்.

உங்கள்பிள்ளைகளை இரத்தத்தை திருத்துவது யார் நாம் எம் சொந்த பந்தங்களை தாய், தந்தையரை துறந்து நெடுந்தூரம் வந்து விட்டோம். ஒவ்வோர் தமிழீழ தாய் தந்தையும் எம் தாய், தந்தையே சகோதரனும் சகோதரியும் எம் சகோதரன் சகோதரி தான் நீங்கள் எம்மை பாசத்துடன் திருத்தாமல் கண்டிக்காமல் விட்டால் எம்மை யார் திருத்துவது? யார் கண்டிப்பது?

மேலும் ஓர் கருத்து மக்கள் மனதில் உள்ளது "புரட்சிக்காரர்கள் அல்லது போராட்டக் காரர்கள் கல்நெஞ்சு படைத்தவர்கள் கொடுரத்தனம் மிக்கவர்கள், பயங்கரமானவர்கள், அன்பு பாச உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவர்கள்"

ஆனால் இந்த இதயங்களின் ஆழத்தை ஆராய்ந்து பார்த்தவர்களுக்கு வருடிப் பார்த்தவர்களுக்கு தெரியும் அந் நெஞ்சங்களின் துடிப்பு!

அந்த இதயங்களின் மென்மை, அன்பு, பாசம் இரக்கம் போலியானதன்று உண்மையானது, என்றும் வாழ்கின்றது இவைகளுக்காக உயிரைக் துறக்க கூடியளவு கூட இறுக்கமானது ரோஜா இதழை விட மென்மையான இதய உணர்வுகளையெல்லாம் இதயத்தின் ஆழத்தில் அடக்கி வெளியில் உலாவிவரும்சிறுகுழந்தைகள் இவைகள். இது எழுதுவதற்காக எழுதப்பட்ட எழுத்தல்ல. அனுபவிக்கப்பட்ட உண்மைகள் இந்த இதயங்களின்உணர்வுகள் சாதாரண சராசரி உணர்வுகளில் இருந்து வேறுபட்டது. தீவிரமான உணர்ச்சி கொந்தளிப்பை இவ் உள்ளங்களின் ஆழத்தில் என்றும் காணலாம். ஓர் மரண வீட்டில் போலிக்காக அழுது ஒப்பாரி வைத்து கண்ணீர் சிந்துவதும், போலிக்காக சிரிப்பதும் உள்ளே நஞ்சை வைத்து வெளியே வேறொன்றை கதைப்பதும் இவைகளுக்குத் தெரியாது.


தெளிந்த மனதில் எதையுமே உண்மைக்காக மட்டுமே வாழும் இவ் இதயங்களின் துடிப்பு எக்கணமும் நிச்சயமற்றது.

மேற் கூறப்பட்டவையெல்லாம் விடுதலைப் போராளிகளைப் பற்றி ஆம் *விடுதலைப் போராளிகளை* பற்றி மட்டுமே.

எதிர்கால தலைமுறைகளின் சுபீட்சத்திற்காக சுதந்திரத்திற்காக தம்முயிரை தியாகம் செய்யும் இவைகளின் வாழ்வு?...

# யுத்த நிறுத்தம் தான் !

## தமிழீழ எல்லைப்புறமும், தென்பகுதியும் உருக்குலைக்கப்பட்டு வருகின்றன.



விடிவதற்கிடையில் தலைக்கு மேல் வட்டமிடும் ஹெலிகப்டர்கள்! காடு, மேடு, சேறு'சகதி அனைத்தையும் தாண்டி வரும் டாங்கிகள்; ஓர் வலிமை பொருந்திய நாட்டுக்கெதிராக தொடங்கப்பட்ட போர் போல் அப்பாவி நிராயுத பாணிகளுக்கெதிராக நடைபெற்று வரும் கோரமான போர் தொடர்கிறது

தமிழீழ எல்லைப்புற பிராந்தியங்களும் தமிழீழத்தின் தென் பகுதியும் (கிழக்கு மாகாணம்) அடக்கு முறையாளனின் அகோரப் பிடிக்குள் அடிக்கடி சிக்கித்தவிக்கிறது இந்தப் பிராந்தியங்களில் சிறிலங்கா இன வெறி அரசின் பிரதிநிதிகளாக துப்பாக்கி ஏந்திய ஓர் புதிய வகை பிராணிகள் புரிந்து வரும் கொலைகளும் நாசகார வேலைகளும் கட்டுக்கடங்காமற் சென்று கொண்டிருக்கின்றன.

குறிப்பாக வவுனியா, திருமலை மண் அனுபவிக்கும் துயர்கள் சொல்ல முடியாதன. அரச காடையரின் அட்டகாசத்தனத்தில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வவுனியா. திருகோணமலை பிராந்தியங்கள் உருக்குலைந்து போயுள்ளன.

அரச காடையரின் கொலை வெறிக்கு பலியான தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. காம வெறி பிடித்த மிருகங்களின் காம இச்சையில் அடங்கிப் போன எம் சகோதரிகள் திட்டமிட்டு சொத்துகள் சூறையாடப் படுவதும் அழிக்கப்படுவதும் இம் மண்ணின் வழமைகள்.

சிறிலங்கா அரசால் நன்கு திட்டமிடப்பட்டே இத்தனை நாசகார வேலைகளும்செய்விக்கப் படுகின்றன. இதனைத் தொடர்ந்து தமிழ் பேசும் மக்கள் தம் பாரம் பரிய பிரதேசங்களில் இருந்து அடித்து விரட்டப் படுகின்றனர்.

தமிழீழ மக்கள் அடித்து விரட்டப்பட்ட இடங்களில் சிங்கள சமூகத்திலிருந்து விடுபட்ட அநாகரிக கூட்டங்கள் இனவெறிக் காடையர்கள் குடியேற்றப் படுகின்றனர்.

இவர்களை பாதுகாக்க ஆயுதமேந்திய காடையர்களான ஊர்காவல் படை நியமிக்கப்படுகின்றது. எது வித பாதுகாப்புமற்ற தமிழ்பேசும் மக்களுக்கெதிராக இவை புரியும் அட்டகாசம்!

சிறிலங்கா அரசின் தமிழ் பேசும் மக்களை பூண்டோடு அழிக்கும் வேலைகள் தொடர்கின்றன.

சமீபத்தில் இவ்வாறு உடமை,உயிர்கள் பறிக்கப்பட்டு அனைத்தையும் இழந்த தமிழ் பேசும் மக்கள் புகலிடம்தேடி ஓரிடத்தில் நிறுவப்பட்ட தற்காலிக நிவாரண முகாமில் தங்கியிருந்தனர்,


வெறிநாய்கள் அங்கும் தமது வெறிச் செயலைத் நடத்துகின்றன. அனைத்தையும் இழந்த தமிழ் பேசும் மக்களின் உயிர்களும் பறிக்கப் படுகின்றன

ஒரு சமயம் 85 முக்கியமான பயங்கரவாதிகளை கைதுசெய்ததாக லலித் அறிவித்தார். ஓர் தற்காலிக நிவாரண முகாமில் குடும்பஸ்த்தர்களாக தங்கியிருந்த ஆண்களே அவர் குறிப்பிட்ட 85பயங்கரவாதிகள்.

சமீபத்தில் திருமலை மண்ணின் ஒவ்வொரு அங்குலமும் சிறிலங்கா அரச படைகளின் துப்பாக்கி குண்டுகளால் சல்லடை போடப்பட்டுள்ளது. ஹெலிகாப்டர் பறக்கும் போதெல்லாம் சுட்டுக் கொண்டு செல்வது வழமையாகிவிட்டது, தரைப்படை ஆகாயப்படை கடற்படை மூன்றாலும் சுற்றி வளைக்கப்பட்ட இம் மண்ணில் தமிழ் பேசும் மக்களின் இரத்தம் ஓடிக் கொண்டிருக்கின்றது.



அரச காடையரால் ஆக்கிரமிக்க பட்டுள்ள இந்த மண்ணை பாதுகாக்க விடுதலைப் புலிகள் முழு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த மக்களின் வேதனைகளையும் துன்பங்களையும் தாங்கி அம்மக்களுடனேயே வாழ்ந்து வரும் விடுதலைப்புலிகள் தம் உயிரை துச்சமாக மதித்து அம் மக்களை காத்து வருகின்றனர். சிங்களமக்களும் கலந்து வாழும் பிரதேசங்களில் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் நிறைந்த சூழலில்; தினம் தினம் அனுபவிக்கும் இராணுவ கெடுபிடிகள் இவைகளுக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் உயிர் பிழைப்பது மிக அரிதானதே ஆனல் தமிழீழ மக்களுக்காகவே, அவர்களின் பாதுகாப்பிற்காகவே, அவர்களின் மீட்சிக்காகவே களத்தில் விடுதலைப் புலிகளின் உயிர்கள் சங்கமமாகின்றன.



திருமலை மண்ணில் மிக குறுகிய காலத்தில் எமது வீரர்கள் பலரை இழந்து விட்டோம் ஆனல் சொல்லொணு உறுதியுடனும் தீரத்துடனும், தியாகத்துடன் இந்தமண்ணிலே அம் மககளுடனேயே இரண்டறக் கலந்து விட்ட விடுதலைப்புலிகள்! மேலும் சிறிலங்கா அரசால் பயிற்சி பெற்ற சில சக்திகள் விடுதலைப் போராளிகளை கட்டிப் பிடித்தே காட்டிக் கொடுக்கின்றனர் இவர்களுக் கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை கட்டாயமாக்கப்படுகிறது.

இத்தனை சிரமத்தையும் இன்னல்களையும் தாங்கி அங்கேயே வாழ்ந்து வரும் தமிழீழ மக்களை பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு,கட்டாயக் கடமை விடுதலை இயக்கங்களினுடையதே

தமிழீழ எல்லைப்புற மக்களின் துன்ப துயரங்ளுக்கு பரிகாரம் காண வேண்டியது விடுதலை இயக்கங்களே, சகல விடுதலை இயக்கங்களும் எல்லைப்புற பாதுகாப்பை தீர்மானிக்க வேண்டும். அதை நோக்கி எங்களின் கவனத்தை திருப்புவோம்'

மேலும் தமது உற்றூர் உறவினர் உடமை அனைத்தையுமே இழந்து நிற்கும் எம் மக்களுக்கு முழு உதவியும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டியது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையே. பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனங்கள் சங்கங்கள் ,விடுதலை இயக்கங்கள் அனைத்தும் உடன் நடவடிக்கைகளில் இறங்கி எமக்கு கை கொடுக்குமாறு வேண்டுகிறோம்

மேலும் பாதிக்கப்பட்ட எம் மக்களின் நிவாரண உதவிகளை கொள்ளையடிப்பதோ அல்லது சேதப்படுத்துவதோ அல்லது கையாடல் செய்வதோ மிகக்கடுமையாகவே எம்மால் பார்க்கப்படும் இதில் சம்பந்தப்பட்டவர் எவராயிருப்பினும் மிகக் கடுமையான நடவடிக்கை தொடரப்படும் என இறுதியாக எச்சரிக்கிறோம்.

### எமது இயற்கை வளங்களை பாதுகாப் . , ,

(3ம் பகக்க தொடர்ச்சி)

பயன்படுத்தத் தொடங்கல் அவசியமானது. இவைபற்றி முழுமையான தகவல்களை நாம் பின்னர் தருவோம்.

கால் நடை வளர்ப்பின் மூலம் எமது விவசாய நடவடிக்கைகளை செய்வதோடு எமது பால் உணவு இறைச்சி தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

இன்று கொண்டாடப்படும் தேசிய உரவிழாவானது எம் மக்கள் மத்தியில் பரப்புவதன் மூலம் முதலாளித்துவ நாடுகளும் முதலாளித்துவ தரகர்களும் தம்மை வளர்த்துக் கொள்ள எடுத்துள்ள நடவடிக்கையே. இதுபற்றி எமது மக்கள் விழிப்பாக இருத்தல் வேண்டும். உரப்பாவனை மூலம் விவசாய நிலங்கள் சத்தற்றுப் போகின்றது. உரப்பசளையை காம் அறவே ஒழிக்கவேண்டும் எமது நாட்டில் இயற்கையாக கிடைக்கும் தழைகள், கடற்தாளை, சருகுகள் போன்றவற்றை பயன் படுத்தலாம் அத்தோடு சணல் விளைவு செய்து நிலத்தோடு உழுது விடுவதன் மூலம் நிலத்தை பன்மடங்கு வளப்படுத்தலாம்.

மாடுகளை வளர்ப்பதன் மூலம் அவற்றின் எருக்களை கூட்டெருவாக தயாரித்து பயிர்களுக்கு இடுவதன்மூலம் நாம் எதிர்பார்த்த பலனை எளிதில் அடையலாம். இவற்றை மக்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இனிவரும் நாட்களில் இவ்வாறான உரப்பயன்பாடுகளின் தடைகள் எம்மை எதிர்நோக்கும் பட்சத்தில் அவற்றுலுள்ள தீமைகளையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இயற்கையாக கிடைக்கும் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் எமது நிலங்கள் செழிப்புள்ளதாக வளரும். தாவர நோய்கள் குறையும். மாற்றுப்பயிர் ஒன்றை செய்வதன் மூலமும் அதாவது (அவரைஇனப் பயிர்) இதுபோன்ற வளங்களை தொடர்ந்து பேணலாம்.

அடுத்து எமது வளங்களில் பெரும்பங்கை வகிக்கும், பனை தென்னை விருட்சங்கள் நிறைந்த காணிகள் தரிசு நிலங்களாக கிடக்கின்றன, இன்று தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் வயதுமுதிர்ந்த தென்னைகளையும் பனைகளையும் காணக்கூடிய ஒரு துரதிஷ்டமான நிலை உருவாகியிருக்கிறது. எமது மக்கள் தொடர்ச்சியாக வளம்பேணல் இன்மை என்ற கோப்பினுள் சிக்கி இருப்பது பெரும் துயரத்தை தருகின்றது. இதற்கான முதல் நடவடிக்கைகளை எமது மக்கள் கற்றுவருதல் வேண்டும்.

புதிய நாற்றுக்களை நடுவதன் மூலம் எமது வளம் தொடர்ந்துபேணப்பட்டுஎமது எதிர்காலத்தை சுபீட்சம் நிறைந்ததாக மாற்றுவோம்.

# விடிவுக்கு முந்திய மரணங்கள்

காலச் சக்கரம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. தமிழின விடுதலைக்காக புறப்பட்ட பல உயிர்கள் புதைகுழிகளிலே உறங்கி விட்டன, சில தொலைந்து விட்டன. காலச்சக்கரம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

காலம் பலரை மறக்கச் செய்து விடும். ஆனால் மறக்க முடியாதவர்களை, மறக்கக் கூடாதவர்களை யாராலும் எளிதில், ஏன் எப்போதுமே மறக்க முடியாது.

அமரர்களாகிவிட்ட அந்த அன்பு ஜீவன்களை நாம் நினைக்கின்றோம். ஆம் எம்மை விட்டு அவர்கள் வெகு தூரம் சென்று விட்டார்கள். எம்மால் அவர்களை இனி நினைக்க மட்டும் தான் முடியும்.

எம் நினைவுகளில் இருந்து நீக்க முடியாத எம்மால் என்றுமே மறக்க முடியாத இனிய எம் நண்பன் வெள்ளையனை நினைத்து நாம் கண்ணீர் வடிக்கின்றோம். ஏனென்றால் நாமும் மனிதர்கள்.

கிழக்கிலங்கையை பிறப்பிடமாகக் கொண்டவன். பறங்கியர் இனத்தை சேர்ந்தவன், தினம் தினம் சிறிலங்கா இனவாத அரசினால் எம்மக்கள் படும் துயர் கண்டு, எம் இழிநிலை கண்டு, தன் உல்லாச இனிய வாழ்வைத் துறந்து, தன்னை விடுதலைத்தீயில் தானாகவே முன்வந்து, பலியிட்டுக் கொண்டான்.

தமிழின விடுதலைக்கு தமிழீழம் அமைப்பதே தீர்வு என்று உணர்ந்து போராட்டத்தில் குதித்த வெள்ளையனுக்கு தமிழ் எழுதத் தெரியாது எனும்போது அவனை வியப்புடன் எல்லோரும் பார்த்தது வியப்பில்லை. அவன் சிங்களத்திலேயே தன் படிப்பை தொடர்ந்திருந்தமையால் அவன் பேசும் தமிழ் கூட ஆரம்பத்தில் எம்மை குதூகலப்படுத்தியது.

அவன் பேசும்போது எமக்கு ஒரு குழந்தை தன் மழலை மொழியில் தமிழ்பேசுவது போல் தான் இருந்தது. தமிழின் இனிமையையும், சுவையையும் உண்மையிலேயே உணர்ந்தோம்.

அவன் எம்மோடு பயிற்சி முகாமில் இருந்த போது அவனை நாம் புரிந்து கொண்டோம். பயிற்சி மிகக் கடுமையாக இருந்த போதெல்லாம் அவனுடைய நகைச்சுவையால் புத்துணர்வு பெற்றிருக்கின்றோம். பயிற்சி வேளையில் பனித்துகள்கள் மூடிய வேளையில் குதூகலித்த அவனை நாம் குழந்தையாகக் கண்டோம். பனியின் மீது துள்ளி ஓடி அந்தக் குழந்தை காலைக் கூட ஒடித்துக் கொண்டது. பனியின் கொடுமையில் நாம் துவண்ட போதெல்லாம் எல்லோருக்கும் ஆவன செய்து எம்மை அரவணைத்த வெள்ளையன். இப்போ எம்மை துயரில் தவிக்க விட்டு விட்டான்

பயிற்சி முடித்து யாழ்ப்பாணப் பகுதிக்கு வந்தோம். இயக்க வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று அயராது உழைத்தான். இறுதிவரை அவன் வடபகுதியிலேயே இருந்தான். எத்தனையோ தடவைகள் அவன் தன் தாயை இனிய அந்தத் தாயை பார்க்க துடித்திருக்கின்றான். ஆனால் அவனை நாம் அன்பால் இறுகிய பிணைப்பால் எம்மோடேயே வைத்திருந்தோம்.

மட்டக்களப்பு ஈன்றெடுத்த மற்றொரு புதல்வன் சைமன். பொத்துவில் எம். பி கனகரத்தினத்தின் புதல்வன் அவனுடைய தந்தைக்கு எம் இயக்கத்தால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டு, மயிரிழையில் பலத்த காயங்களுடன் உயிர் தப்பி இருந்தார். அப்படி இருந்த போதிலும் எம் இயக்கத்தோடு தன்னை இணைத்துப் போராடியவன். சைமன், வெள்ளையனின் மிக மிகுந்த நண்பன். இருவரும் இசைமீது பற்று உடையவர்கள்.

வெள்ளையனும், சைமனும், எப்போதும் தம் மண்ணுக்கு செல்லத் துடித்துக் கொண்டிருப்பார்கள். சைமன் பரமதேவாவுடன் சேர்ந்து சிறு வயதிலேயே போராடப் புறப்பட்டு தன் இளமைக் காலத்தை சிறையிலே புடம் போட்டான். சிறை அவனின் விடுதலை வேட்கையை தணிப்பதற்கு பதிலாக தீனி போட்டு வளர்த்து விட்டது.



எணுட் எட்வேட் ஸ்ரக் (வெள்ளை) மட்டக்களப்பு

சிறையின் இருண்ட சுவர்களின் நடுவே தனிமையில் இருந்த போதெல்லாம் துடித்துக் கொண்டு இருப்பான். சிறையில் இருப்பதால் அல்ல இயங்க முடியாமல் இருக்கிறேன் என்பதால் சைமன் இயற்கையை, இசையை நல்ல கலையை ரசிப்பவன் கிழக்கிலங்கையின் வண்ண வயல்களில் வசந்தம் துள்ளி விளையாடும் அந்த மண்ணிலே மண்ணின் பெருமையை நினைத்து ரசித்து கழித்த நாட்களை சிறையில் இருக்கும் போது, எண்ணி அழுகின்றான்.

சிறையில் அடைபட்டிருக்கும் அவனுக்கு மிக உயரத்தில் உள்ள சிறு யன்னல் மட்டும் தான். வெளியுலகத் தொடர்பு சிறையிலே கைதிகளின் உரிமைகள் பறிக்கப்படும் போதெல்லாம், சிறையில் காவலர்களின் அடாவடித்தனங்களை, அடிக்கடி தட்டிக் கேட்டதால், மிருகத் தனமாய் பழிவாங்கப் படுவது வழமையான ஒன்று.

சிறையின் கொடுமைகளை ற்றி எத்தனையோபேர் எழுதியிருககிறார்கள். எனவே அதை விடுவோம்.

சைமனுக்கு சிறையின் கொடுமையின் போது அவனை சந்தோசப் படுத்தியவை, பகல் உணவு வேளைகளில் அவனுடன் உணவைப் பகிர்ந்து உண்ணும் சிட்டுக்குருவிகள் தான். சாப்பாட்டிற்குப் பின் எஞ்சிய துணுக்குகளைத் திரட்டி ஜன்னல் வழியே அவற்றை பறவைகளுக்கு போடுவான். இது வழக்கமாகி விட்டது. அநேகமாக வெறுமே எஞ்சிய துணிக்கைகள் மட்டுமே போடப்படவில்லை, உணவை வேண்டுமென்றே மிச்சம் வைத்து அவற்றுக்கு போடுவான். அந்தச் சின்னஞ்சிறு பறவைகள் சற்றுப் பெரிதான ஒவ்வொரு துணுக்கையும் கொத்தித் தின்னப் பாடுபடுவதையும் கிறீச்சிடுவதையும் சச்சரவு செய்வதையும், இளைப்பாறுவதையும் தலையை பாங்குடன் சாய்த்து இறகுகளை கோதிக் கொள்வதையும் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டேயிருப்பான். அந்த சின்னஞ்சிறு பறவைகள் தான் அவனுக்கு உற்றார், உறவினர் காதலியும் கூடத் தான். அவற்றைக் காணாத போது தவிப்பான். காதலியை காணாமல் தவிப்பவன் கூட இப்படித் தவிப்பான் என்று கூற முடியாது. அதன் பின் அவன் சிறையில் இருந்து வெளியே வந்த பின்பும் பறவைகளை நேசித்தான் காதலித்தான். நாம் பறவைகளை சுட்டால் சண்டையிடுவான். வேதனைப்படுவான். ஏன் அழக்கூடச் செய்வான்.

இதை ஏன் கூறுகிறோம் என்றால் அத்தனை மென்மை உளளம படைத்தவன். தன் ஊரை, தன் உறவினரைச், சகோதரங்களை பார்க்கத் துடித்தான். ஆனால் இறுதி வரை தன் ஊரைச் சென்றடையவில்லை. தன் சுற்றத்தை சந்திக்கவில்லை. ஆனால் அவனுடைய ஆன்மா, நிச்சயமாக வசந்தம் வீசும் அந்த கிழக்கிலங்கையில், வயல் வெளிகளில் பறவைகளோடு பறவைகளாக பாடித் திரியும்.

வெள்ளையனும் சைமனும் யாழ்ப்பாணத்தில் இருந்து தம் இடம் செல்ல புறப்பட்ட வேளையில் கொக்கிளாய் ராணுவ முகாம் தாக்குதலில் ஈடுபட்டனர். எடுகககப்படும் சாமான்களில் அரைவாசி தம் இடத்துக்கு என்று உரிமையோடு முன்பே கேட்டான் சைமன். ஆனால் சமான்கள் கிடைத்த போது அவன் இயற்கையோடு கலந்து கீதம் இசைத்துக் கொண்டிருந்தான்

கொக்கிளாய் ராணுவ முகாம் தாக்குதலில் சைமன் எம் 16 அமெரிக்க ரைபிளுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றான் உள்ளே சென்ற அவனுடைய சில தோழர்கள் மணலிலே சுருண்டு விழுந்த போது வெகுண்டான் அவனுக்கு பக்கத்தில் ஒரு மரத்தில் நிலை எடுத்து வெள்ளையன் ரொக்கட்டால் கட்டிடங்களைத் தகர்த்துக்கொண்டிருந்தான். ஒரே ஒரு M.M.G (மீடியம் மெசின்கண்) உள்ள காப்பிடத்தை மட்டும் எம் தோழர்களால் அணுக முடியவில்லை. ரொக்கட்டால் அடிக்கும் போது முன்னால் நடப்பட்டிருக்கும் கம்பிகளில் பட்டு வெடிக்கிறது. எனவே காப்பிடத்தை ரொக்கட்டால் அடிக்க முடியாது.

அந்தக் காப்பிடத்தை நெருங்கிய எம்தோழர்கள் பலர் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். M.M.G இடைவிடாது சடசடக்கிறது. மிகக் கிட்டே நெருங்கிய சிலரைக்கூட அது சல்லடையாக்குகிறது. வெள்ளையனைப் பார்த்து சைமன் சொன்னான்.

''வெள்ளையா பெடியள் சாகிறான்கள்''

M.M.G இடைவிடாது சடசடக்கிறது.

''பொறு பொறு இப்ப கிட்டே போகாதே''

''இல்லை மச்சான் அந்தச் சனியனை நிப்பாட்டா விட்டால் எல்லோரையும் தின்றுவிடும். என்று கூறியபடி சைமன் வேகமாக ஊர்ந்து செல்கின்றான்.

வெள்ளையன் கூப்பிட கூப்பிட அவன் ஊரத் தொடங்கி விட்டான். M.M.G தொடர்ந்தும் சட சடக்கிறது, சைமனுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காக சிலர் காப்பரணை நோக்கி சரமாரியாக சுட்டுக் கொண்டிருக்க சைமன் காப்பரனுக்கு முன் உள்ள கம்பிகளை அடைந்து காப்பரனுள் கைக்குண்டை விட்டெறிய M.M.G தன் இயக்கத்தை நிறுத்தியது.

இன்னொரு குண்டை எறிய எடுத்தான். உள்ளிருந்து எந்தசத்தமும் இல்லை குண்டை இடுப்பில் செருகி M 16ஐ இயக்கியபடி மரக் கட்டையின் மீது ஒரு கம்பியைத் தாண்டிப் பாய உள்ளே காயப் பட்டிருந்த ராணுவ வீரன் துப்பாக்கியை இயக்க இருவருடையகுண்டுகளும் இருவரையும் முத்த மிடுகிறது

வாயிலும், வயிற்றிலும், பலமான ஓட்டைகள் மூச்சடக்குகின்றது மெதுவாக திரும்பி தன் தோழர்களைப் பார்க்கின்றான் அப்படியே மணலில் முகம் புதைய விழுந்து விட்டான்

தன் தியாகத்தின் மூலம் எமக்கு பாதுகாப்பழித்தான்

தன் தோழன், நண்பன், காயம் அடைந்ததை கண்டான், உணர்ந்தான் வெள்ளையன் திடீரென்று அவனுக்கு முதுகந்தண்டு திடீரெனச்சில் விட்டு விட்டது போலவும் பிடரியில் மயிர்க் குச்செறிவது போலவும் உணர் வுண்டாயிற்று தாக்கு விதிசளைத் தவிர்த்து எழுந்து முன் வந்து கட்டிடத்தை தகர்த்தான்,

சைமனின் இழப்பு வெள்ளையனை பாதித்தது என்றே சொல்லலாம், இத்தகைய சூழ்நிலையில் ஏற்படக்கூடிய மிகப் பயங்கர மான மாற்றம் ஒன்று நிகழ்ந்தது அவன் தனக்குள் ஒடுங்கி விட்டான் அழவில்லை சிரிக்கவில்லை, மெது வாக மௌனமே சாதித்தான்

தம் பிறந்த இடத்துக்கு செல்லத் துடித்த இரு சிட்டுக் குருவியில் ஒன்று மறைந்து விட்டது, ஆனாலும் தன் தாயை அடிக்கடி நினைத்துக் கொண்டான். அன்பு வழியும் விழிகளைக்கொண்ட இனிய மாது அவனுடைய பரிவான அணைப்புக்காக ஏங்கினான் என்னதான் தோழர்கள் அன்பாக இருந்தாலும் தாயின் பரிவுக்கு பாசத்துக்கு ஈடு செய்ய முடியுமா

அந்தத் தாயும் துடித்திருப்பாள் தன் அருமை புமகனைக் காண இயக்கத்துக்கு சென்ற பின். அவனை, மகனை அந்த தாய்காணவில்லை. எம்தோழர்களை அடிக்கடி விசாரித்திருக்கின்றாள்வெள்ளையன்மீது கொள்ளை பாசம் வைத்திருந்தாள் கடைசிப பிள்ளை செல்லமாக இருப்பது வியப்பில்லையே தன் செல்வனை காண துடித்த தாய்க்கு அவனுடைய உடலைக் கூட காட்ட முடியாத பரிதாப நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்

ஒரு நாள் நல்லூர் கோயில் வீதியில் தன் தோழன் ஒருவனோடு வந்து கொண்டிருக்கின்றான் வெள்ளையன்

இன்னொரு தெரிந்தநபர் வழியில் மறித்து கதைத்துக் கொண்டிருக்கும போது திடீரென்று ஒரு மினி வான்வந்து பலத்த சதத்துடன் தரித்து நிற்கின்றது

பச்சைப் பேய்கள் வானுக்குள் இருந்து பாய்ந்து இறங்க வெள்ளையன் பக்கத்தில் இருந்த சுவரை பாய்ந்து கடக்க பச்சைப் பேய்களின் இயந்திர துப்பாக்கிகள் முழங்க வெள்ளையன் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டு விடுகின்றான் ஆம் நாம் அவனை வீதியில் தொலைத்து விட்டோம் இல்லை பேய்கள் தூக்கிச் சென்று விட்டார்கள்

நாம் இருக்கும் வரை, நம் மக்கள் இருக்கும் வரை எம் உடலில் சக்தி இருக்கும் வரை எம் உயிர் இருக்கும் வரை, பச்சை பேய்கள் இருக்கும்வரை, அடக்குமுறை இருக்கும் வரை போராடுவோம் எமக்காக, எம் குழந்தைகளுக்காக, எம் அடுத்த சந்ததிக்காக, அவர்கள் சுதந்திரக் கீதம் இசைப்பதற்காக போராடுவோம்...,